


# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

## 2015 மே வெளியீடு

மலைகள் விலகினாலும்,
பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும்,
என் கிருபை உன்னைவிட்டு
விலகாமல் இருக்கும் என்று
உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.
ஏசாயா 54:10


ஜீவ ஒளி
தேவனுடைய வார்த்தைகளடங்கிய,
ஆவிக்குரிய வாழ்வில்
வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய
ஜீவ ஒளி சஞ்சிகையை
வெளியிடுவதில் நாங்கள்
பெருமகிழ்ச்சியடைகிறோம்.
இச்சஞ்சிகையின் மூலம் அநேக
விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில்
வளர்ச்சியடைவதும் இயேசு
கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக
ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை
இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே
எங்களுடைய ஜெபமாயுள்ளது.
கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்
வெளியிடும் இவ்விலவச
சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள்
பெற்றுக்கொள்ள விரும்பினால்
கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை
பூர்த்தி செய்து கீழ்வரும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஜீவ ஒளி
கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்
07, விவேகானந்த வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06.
தொ. பே.: 011 2 581901
www.christianfellowshipcentre.com



# அன்பின் ஈவு

பூலோக சந்தோஷம் பொன்னையும் பொருளையும் சம்பாதிப்பதினால் உண்டாகிறது. தாங்கள் விரும்புவதை-யெல்லாம் பெற்றுவிட்டால் தாங்கள் சந்தோஷமாயிருக்கலாம் என மனிதர் நினைக்கிறார்கள். ஆனால் சீக்கிரத்-திலோ அல்லது சற்று தாமதமாகவோ வாழ்க்கையில் பல ஏமாற்றங்களை சந்திக்கும் பொழுது அவர்களுடைய நம்பிக்கையெல்லாம் தவிடுபொடியாகின்-றன. உனக்கு சந்தோஷம் கொடுக்குமென நீ நினைத்துக்கொண்டிருப்பதெல்லாம் முடிவில் வெறுமையாகவே போய்விடும். ஆனால், பாவிகளுக்காக மரித்து உயிர்த்த, அன்பும் ஜீவனுமுள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே உனக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்க முடியும்.

ஆனால், அவர் கொடுக்கும் சந்தோஷம் உலகப்பிரகாரமானதல்ல. அது அவர்க்கே சொந்தமானப் பரலோகப் பேரின்பமாகும்.

நமக்குள் வாசமாயிருக்கும்படி, வந்திருக்கிற பரிசுத்த ஆவியானவர், தேவ ஈவாகிய பரலோக நீதியை நமக்குள் அமோகமாய் நிலைநாட்டு-வதால், அந்த தேவ நீதியே நமது சமாதானம், சந்தோஷத்தின் ஊற்றாய் இருக்கிறது. தேவனுக்கு முன்பாக நீதிமான்களாய் காணப்படுவதற்காக மிகவும் அதிகமாகப்பிரயாசப்படுகிறனர்.

என்றாலும், மனிதர் “நீதி” என்றழைப்பதை தேவன் அழுக்கான கந்தை என்றே கருதுகிறார் (ஏசாயா 64:6). அது யூதருடைய நீதியானாலும் வேற்று மதத்தினருடைய நீதியாலும், பெயர் கிறிஸ்தவர்களின் நீதியானாலும், யூதருடைய நீதியானாலும், எல்லா மனித நீதிகளையுமே அழுக்கான கந்தைகள் என நீதியுள்ள தேவன் புறக்கணிக்கிறார்.

ஆனால், அவருடைய அன்பின் ஈவாக, தேவன் தம்முடைய நீதியை உனக்கு இலவசமாகக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். அவர் அன்பு கலந்த சமாதானத்தை அருளுவது மட்டுமின்றி நித்திய காலமெல்லாம் அது பெருகும்படியாகவும் கிருபை அருளுவார். அதுதான் அவருடைய கிருபையின் ஐசுவரியமாகும்.

அன்பு கலந்த சமாதானத்துடன் பரிசுத்த ஆவியைக் கொண்டு சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கூட்டி வழங்குகிறார். தேவனுடைய தூய ஆவியானவர் உன்னில் கிரியை செய்ய இடங்கொடுக்கும் பொழுது, நீ தேவனுடைய நீதியையே பெறுகிற படியால், அதன் பலனாக நீ மகிழ்ச்சியினால் துள்ளிக்குதிப்பாய். ஏனெனில், தேவனுடைய பார்வையில் நீ நீதிமானாயிருக்கிறாய். மேலும் ஆவியானவர் கொடுக்கும் சாட்சியும், நிச்சயமும் தினந்தினம் செழிப்புடன் வளர்ந்து அதிகம் அதிகமான பெலனைக் கொடுக்கும்.

“தேவனுடைய ராஜ்யம்
புசிப்பும் குடிப்புமல்ல, அது
நீதியும் சமாதானமும் பரிசுத்த
ஆவியினாலுண்டாகும்
சந்தோஷமுமாயிருக்கிறது”
ரோமர் 14:17

அனுதின தேவ
இரகசியத்திலிருந்து சகோ. பக்த் சிங்

# கர்த்தருக்குப் பயப்படும் மனிதன்.

*சங்கீதம் 128*

கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே! இந்த சங்கீதத்தில் கர்த்தருக்குப் பயந்து நடக்கிற மனிதனின் வாழ்வினைப் பற்றி நாம் காண்கிறோம்.

கர்த்தருக்குப் பயப்படும் விசயத்தில் முதல் பொறுப்பை கர்த்தர் புருஷனுக்கே கொடுத்திருக்கிறார். நாம் எல்லோருமே கர்த்தருக்குப் பயப்பட வேண்டியதே. ஆகிலும் அதன் முதலாவது இடத்தில் புருஷனே காணப்படுகிறான். ஆகவே அவன் தானும் தன் குடும்பமும் கர்த்தருக்குப பயந்து நடப்பதற்கான பொறுப்பாளியாக இருக்கின்றான்.

**உன் கைகளின் பலனைச் சாப்பிடுவாய்**

மனிதன் (புருஷன்) கர்த்தருக்குப் பயந்து மனம் போல வாழாமல் தீமைகளை வெறுத்து கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய நேரத்தை பிரயாசத்தின் பலனை கொடுத்து உண்மையுள்ளவனாக வாழும் போது மேற்படி வார்த்தை அவனுக்கு உரியதாகின்றது. அவனது பிரயாசம் வீணாகாது.

**மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்கொடியைப் போல இருப்பாள்**

இதிலே மனைவி எப்படி கர்த்தருக்கு பயப்பட வேண்டும் என அறிவோம் கனி நிறைந்த திராட்சைக்கொடியாக மனைவி இருக்க வேண்டுமானால் தன் சொந்த புருஷனுக்கு கீழ்ப்படிய வேண்டும். கொலோசேயர் 1:10ல் சொல்லப்பட்ட நற்கிரியை எனும் கனிகள் வெளிப்பட வேண்டும்.

எபேசியர் 5:24, 1 பேதுரு 3:11, மற்றும் 1 தீமோ 2: 10-12ல் சொல்லப்பட்ட படி கீழ்ப்படிவு தகுதியான வஸ்திரம் நாணம், தெளிந்த புத்தி, தேவபக்தி, அடக்கம், அமைதல், பரிசுத்தம், அன்பு, புருஷன் மேல் அதிகாரம் செலுத்தாமை, சாந்தம் (1 பேதுரு 3: 4) போன்ற இயல்புகளை உடையவளாக வாழவேண்டும். ஆனால் இன்று இதற்கு மாறாக சில கிறிஸ்தவ குடும்பப்பெண்கள் நடப்பதைக் காண்கிறோம்.



அவர்கள் தங்கள் புருஷனுக்குக் கீழ்ப்படிய விரும்பாமல், தாங்களே தலைமைத்துவ பொறுப்பை எடுத்துக்கொள்கிறார்கள். பெண்ணானவள் படித்தவளாகவும் உயர் பதவி வகிக்கிறவளாகவும் இருந்து கணவன் குறைந்தளவு கல்வியறிவையும் ஊதியத்தையும் உடையவனாக இருக்கின்ற வேளையில் மனைவி தானே பெரியவள், எனக்கு எல்லாம் முடியும், நான் யாருக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை என எண்ணி வீட்டின் தலைவனை அடக்கி ஆளுகின்றனர். இது ஆண்டவரின் வார்த்தைக்கு விரோதமானது.

இந்நிலையில் வாழ்கின்ற பெண்கள் மனந்திரும்ப வேண்டும். அவர்கள் வேதம் கூறுகின்ற படி கர்த்தருக்கும் தம் கணவனுக்கும் கீழ்படிந்து வாழ்வதற்கேற்ப நடத்த புருஷன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

### உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப் போல இருப்பார்கள்

பிள்ளைகளைக் கவனிக்கும் போது அவர்கள் மிகுந்த பலனைக் கொடுக்கிறவர்களாகவும். ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள்.

ஆனால் இன்று சில தகப்பன்மார் தமது பொறுப்பிலிருந்து விலகும் போது பிள்ளைகள் மிகுந்த பாதிப்பை சந்திக்க நேர்கிறது.

நீதி 22:6ல் பிள்ளைகளை தகப்பன் கர்த்தருடைய வழியில் நடத்த வேண்டும். இன்று தாயைக் கனம் பண்ணி தகப்பனை அசட்டை பண்ணுகின்ற எத்தனையோ பிள்ளைகள் வாழ்கின்றார்கள்.



ஏனெனில், தான் உழைத்தால் மட்டும் போதும் மற்ற யாவையும் மனைவி கவனித்துக்கொள்ளட்டும் என்று புருஷன் தன் பொறுப்பில் இருந்து தவறும்போது, பிள்ளைகள் தகப்பனது அசட்டைப்போக்கினால் தைரியமடைந்து தீய வழிகளிலும் தாய் தகப்பன் இருவருக்குமே அடங்காமலும் நடக்கிறார்கள்.

இதனால் ஆண்டவரின் நாமம் தூஷிக்கப்படுகிறது. அவர்களது எதிர் காலமும் பாதிக்கப்படுகிறது. குடும்பங்களும் மிகுந்த துக்கத்தையும் சந்திக்க வேண்டியிருக்கும். ஆகவே தகப்பன் பிள்ளைகளை கண்டித்து நடத்தும் போது அவர்களுடைய ஆத்துமாவை பாதாளத்திலிருந்து காப்பாற்றுகின்றான். அதினால் பிள்ளைகள் மிகுந்த பலனையும் கொடுக்கிறவர்களாய் இருப்பார்கள்.

### கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை ஆசீர்வதிப்பார்

இப்படியாக மனுஷன் கர்த்தருக்குப் பயந்து தன் மனைவி பிள்ளைகளைக் கர்த்தருடைய சத்தியத்தில் நடத்தும்போது, மனைவியினால் பிள்ளைகளால் மிகுந்த பலனையும் மகிழ்வையும் அவன் பெறுகிறான். அத்தோடு தேவன் அவனை உன்னதத்திலிருந்து ஆசீர்வதிக்கிறார். அவனுடைய வாழ்வு சமாதானமாக இருக்கும். அவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் காண்பான். அவன் நீண்ட ஆயுளோடு இருந்து கர்த்தரை மகிமைப்படுத்த முடியும்.

ஆகவே கணவன் கர்த்தருக்குப் பயந்து வாழும் போது அந்த வாழ்வு மனைவியையும் பற்றிக்கொள்கிறது. இப்படி பெற்றோர் கர்த்தருக்குப் பயந்து வாழ்வதைக் காணும் பிள்ளைகளும் அதைப் பின்பற்றுவார்கள். ஆகவே கர்த்தருக்குப் பயப்படுதல் அவசியமானது.

சகோ. பெனவேந்தூர்,
வவுனியா.



# விசுவாச ஜெபம்!

தியானிக்க வேண்டிய பகுதி : யோனா 2: 1 - 2.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையிலே தேவனோடுள்ள உறவு மிக முக்கியம். “உறவு” என்றாலே ஒருவரோடு பேசுவதைக் குறிக்கிறது அல்லது ஐக்கியத்தைக் குறிக்கிறது.

உறவின் மூலமாகவே நமது சுகத்தை தெரிவிக்கிறோம், நமது பிரச்சினையை தெரிவிக்கிறோம், நமது தேவைகளை தெரிவிக்கிறோம். இதைப் போலவே தான் நமது தேவைகளை நம் தேவனிடத்தில் சொல்வது தான் ஜெபம். ஆனால், இன்று அநேகர் தேவனிடத்திலே ஜெபிக்கிறவர்களாக இருப்பது உண்மைதான், அதை விசுவாசத்தோடு ஜெபிக்கிறோமா?

வேதம் சொல்கிறது எபிரேயர் 11:1 விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறது. இதைப்போல யோனாவின் ஜெபத்தில் சில காரியங்களைப் பார்க்கலாம்.

யோனா நம்மைப் போல கீழ்ப்படியாத ஒரு மனுஷன். முரட்டாட்டமுள்ள மனுஷன் தான். ஆனால், அவனது ஆபத்து வேளையிலே தேவனை நோக்கி முறையிட்டான். தேவன் அதற்கு பதில் கொடுத்தார். நாமும் நமது இக்கட்டான சூழ்நிலையில் எல்லாராலும் கைவிடப்பட்ட வேளையிலும் நம்பினவர்களும் கைவிட்டார்களே என்ற வேதனையோடும் நீங்கள் இருக்கலாம். உங்கள் நம்பிக்கையை தளர விடாதிருங்கள். யோனாவுக்கு பதில் கொடுத்த அதே தேவன் உங்களுக்கும் பதில் கொடுப்பார்.

யோனாவின் வாழ்க்கையிலே நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். இவனது ஜெபத்திலே மூன்று காரியங்கள் அடங்கியுள்ளதை நாம் பார்க்கலாம்.

1. அவன் தேவவசனத்தை தன் இருதயத்திலே வைத்திருந்த மனுஷன்
2. தேவனுடைய ஆலயத்தின் பேரில் வாஞ்சை கொண்ட மனுஷன்.
3. தேவனை ஆராதித்த மனுஷன்.

முதல் காரியத்தைப்பார்க்கலாம்!
சங்கீதம் 130: 1, சங்கீதம் 120: 1,

சங்கீதம் 65: 5, 2, சங்கீதம் 37: 31 சங்கீதம் 119: 11 இந்த வசனங்களில் எல்லாம் நம் தேவன் நம் ஜெபத்தை கேட்கிறவராகவே இருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம்.

இந்த வசனங்களையெல்லாம் யோனா “தன் இருதயத்திலே வைத்திருந்தான்”. இன்று நம்மில் அநேகர் வசனத்தை கையில் ஏந்தினவர்களாக இருக்கிறோமே தவிர, நம் இருதயத்திலே வசனம் இல்லை. ஆதி நாட்களிலே யூதப்பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வசனத்தை மனனம் செய்யக்கற்றுக் கொடுத்தார்கள். யோனாவின் இருதயத்திலே வேத வசனம் இருந்த படியினாலே, மீனின் வயிற்றிலிருந்த போது வேதவசன அடிப்படையிலே ஜெபிக்கிறான். நம் பிள்ளைகளுக்கு நாம் இன்று வசனத்தைக் கற்றுக்கொடுக்கிறோமா?

யோனா 2: 2ல் அவனுடைய ஜெபம் எப்படியாயிருக்கிறது? அவர் எனக்கு உத்திரவு அருளினார், நீர் என் சத்தத்தைக் கேட்டீர் என்று தான் எழுதப்பட்டிருக்கிறது. அவர் எனக்கு உத்திரவு அருளுவார், அவர் எனக்கு செவி கொடுப்பார் என்று ஜெபிக்கவில்லை, இறந்த காலத்தில் கூறுகிறான். அதாவது என் விண்ணப்பத்துக்கு பதில் வந்து விட்டது என்று. இதுதான் விசுவாசம்.


எபிரேயர் 11:1ல் “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” என்கிறது. இயேசு கிறிஸ்துவும் இவ்வாறே ஜெபித்தார். யோவான் 11: 41ல் கல்லறையை விட்டு லாசரு இன்னும் வரவில்லை. பிதாவே, நீர் எனக்கு செவி கொடுத்த படியினால் நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்றார். காரணம் என்ன? ரோமர் 4: 17ம் வசனத்தின் படி இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர் நம் தேவன். இதுதான் விசுவாசம், இதுவரை உன் வாழ்வில் கிடைக்காத காரியம் இருந்தாலும், தேவன் தந்து விட்டார் என விசுவாசத்தோடு ஜெபி.

சகோ. சந்திரன்,
மன்னார்.

‘தேவன் தொட்டார்’

1. *யாக்கோபின் தொடைச்சந்தைத் தொட்டார் – ஆதி 32: 25*
2. *கிதியோனின் காணிக்கையைத் தொட்டார் – நியா 6: 18–24*
3. *எலியாவை தட்டி எழுப்பினார் 1 இராஜாக்கள் 19: 4, 5*
4. *யோபுவை தொட்டார் யோபு 19: 21*
5. *ஏசாயாவின் உதடுகளைத் தொட்டார் – எசாயா 6: 6, 7*
6. *எரேமியாவின் வாயைத் தொட்டார் எரேமியா 1: 9*
7. *தானியேலைத் தொட்டார் தானியேல் 10: 18, 19*

*தொகுப்பு: M. ஜெபத்துரை*



# பார்

எண் 21:4-9 | ஏசா 45:22

மேலுள்ள வேதப்பகுதியின் அடிப்படையில் 4 வகையான பார்வைகளைக் கருதப் போகிறோம்.

### 1. உனக்குள் பார்

மீள்சீர் பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய முதல் அடி இதுவே. சர்ப்பத்தால் கடிபட்டவன் தன் சுய நிலைமையைப்பார்த்து, தான் சர்ப்பத்தால் கடிபட்டிருப்பதை உணர வேண்டியதாயிருந்தது. நாம் நம்மையே பார்த்து நாம் பாவம் நிறைந்தோர் என உணர வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் காப்பாற்றப்படும் நம்பிக்கை ஏற்படுகிறது. தேவனுக்கு முன்பாக நீங்கள் பாவி எனவும் உங்களுக்கு இரட்சிப்பு தேவை-யென்றும் ஏற்றுக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா?

### 2. எளிமையான விசுவாசத்துடன் பார்

இவ்வேத பகுதிக்கமைய, கடிபட்டவன் தான் இருந்த இடத்திலிருந்தே பார்க்க வேண்டியதாயிருந்தது. அவனால் செய்ய முடிந்ததும் செய்வான் என எதிர்பார்க்கப்பட்டதும் வேறொன்றுமல்ல. கடிபட்டவன், எளிமையான விசுவாச-த்துடன் அவ்வெண்கல சர்ப்பத்தைப் பார்த்து அப்பார்வை தனக்கு வாழ்வு தரும் என நம்ப வேண்டியிருந்தது. எளிமையான விசுவாசத்துடனே பார்த்து தேவன் அருளும் இலவச ஈவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?

### 3. நேராக பார்

தேவ கட்டளைப்படி, கடிபட்டவன் வெண்கல சர்ப்பத்தை மட்டுமே பார்க்க வேண்டியிருந்தது. வேறே பரிகாரம் எதுவும் இல்லாதிருந்தது. உயர்த்தப்-பட்ட சர்ப்பத்தை தவிர அதற்கொப்பான வேறொன்றாலும் உயிர்பிழைக்க வைக்க முடியவில்லை. அத்துடன் கடிபட்டவன் வனாந்தரத்தில் எங்கே இருந்தாலும் உயர்த்தப்பட்ட சரப்பத்தையே பார்க்க வேண்டியதாயிருந்தது. நம் இரட்சிப்பு தொடர்பாகவும் இதே நிலைதான்.

இரட்சிப்பானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக மட்டுமே கிட்டுவதுடன் பூமியின் எந்த மூலையிலிருந்தாலும் அவரை நோக்கிப்பார்ப்பதன் மூலம் நாம் இரட்சிக்கப்படலாம்.

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்க-ப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” அப் 4:12

“இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்-லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார்.” யோவான் 14:6

இவ்வுலகிலுள்ள மற்ற யாவும், அவை எவ்வளவு நல்லவைகளாயிருந்தாலும் மனிதனை அவனது பாவங்களிலிருந்து விடுவிக்க அவை போதாதவையே.

மதம், நற்செயல்கள் போன்வை ஒருபோதும் மனிதனை அவனது பாவங்களிலிருந்து இரட்சிக்க முடியா-தவை. நம் பாவங்களைச் சுமந்து சிலுவையில் தொங்கும் இரட்சகரை நோக்கிப்பார்ப்பதே நம்மை இரட்சிக்கச்-செய்யும்.

ஆகவே, மற்ற தத்துவங்கள், மதங்கள், மனித வழிமுறைகள் அனைத்தையும் விட்டுவிட்டு இரட்சகர் இயேசுவை மட்டுமே நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்பட நீங்கள் விரும்புகிறீர்களா?

**3. சீக்கிரம் பார்**

கடிபட்டவனுக்கு வீணாக்க நேரம் இல்லை. ஆனால் உடனடியாகவே உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கி பார்த்தாக வேண்டும். பார்ப்பதில் ஏற்படும் தாமதம் மரணத்தையே வருவிக்கும். இன்றே, இப்போதே சிலுவையிலறையப்பட்ட இயேசுவை நீங்கள் நோக்கிப்பார்க்க வேண்டும்.

“அநுக்கிரக காலத்திலே நான்
உனக்குச் செவிகொடுத்து,
இரட்சணியநாளிலே உனக்கு
உதவிசெய்தேன் என்று
சொல்லியிருக்கிறாரே,
இதோ,
இப்பொழுதே அநுக்கிரககாலம்,
இப்பொழுதே இரட்சணியநாள்.”
2 கொரிந்தியர் 6:2

தேவன் அருளும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள நீங்கள் எடுக்கும் தீர்மானத்தை சாத்தான் எப்போதுமே தாமதிக்கச்செய்யவே முயற்சிப்பான். ஆனால் கர்த்தரோ, இப்போதே முடிவெடு என்கிறார்.

நேற்று கடந்து போயிற்று. நாளை உன்னிடமில்லை. ஆனால், இன்றே இரட்சணிய நாள். இப்போதே ஏற்றுக்கொள்ளும் காலம்.

இப்போதே சிலுவையிலறையப்பட்ட இயேசுவை விசுவாசத்தோடு நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்பட நீங்கள் விரும்புகிறீர்களா?

தேவனுக்கு முன்பாக நீங்கள் ஒரு பாவி என உணர்ந்து இரட்சிப்பை அருளக்கூடிய கர்த்தராகிய இயேசுவே ஒரே ஜீவனுள்ள உண்மையான தேவன் என விசுவாசித்து அவரை நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்படுங்கள்.

~ சகோ. தினேஷ் ~

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற
உங்கள் அனைவரையும்
அழைக்கிறோம்!



# பரிசுத்த ஆவியின் நபத்துவத்தின் சாயல்

*சகோ. சேவியர், வவுனியா.*

1. **அவருடைய நபத்துவத்தை வெளிப்படுத்தும் பண்புகள்:**
   - சிந்தை அறிவு, சர்வஞானம் உடையவர். 1 கொரி 2:10-11 ரோமர் 8:27
   - அவருக்கு சித்தம் இருக்கின்றது. முடிவுகளை எடுக்கின்றாவர். அப்போஸ்தலர் 13:1, 1 கொரி 12:11
   - அவர் உணர்வு உடையவராக இருக்கின்றார். எபேசியர் 4:30

2. **நபத்துவத் தன்மை அவருடைய செய்கைகளில் வெளிப்பட்டமை:**
   - ஆள்தத்துவத்தை செய்கை மூலம் வெளிப்படுத்துதல். 1 கொரி 12:11
   - வெளிப்படுத்துகின்றவராக இருக்கின்றார். யோவான் 16:13
   - போதிக்கின்றவராக இருக்கின்றார். யோவான் 14:26
   - சாட்சியிடுகின்றவராக இருக்கின்றார். பிதாவைப்பற்றியும் இயேசுவைப்பற்றியும் பூரணமான உண்மைத்துவம் பற்றிக்கூறுபவர். யோவான் 15:26, அப்போஸ்தலர் 1:8, ரோமர் 8:16
   - அவர் மத்தியஸ்தராக இருப்பார். ரோமர் 8:26, யோவான் 14:16-26
   - அவர் பேசுகின்றவராக இருக்கின்றார். வெளி 2:7
   - குத்தி உணர்த்துகின்றார். யோவான் 16:8
   - சோதித்து அறிகின்றவர். 1 கொரி 2: 10
   - பெலன் தருகின்றவர். அப்போஸ்தலர் 1:8
   - சத்தியத்தின் படி நடப்பதற்கு வழிகாட்டியாக இருக்கின்றார். யோவான் 16:13
   - கிறிஸ்துவை மகிமைப்படுத்துகின்றவராக இருக்கின்றார். யோவான் 16:14
   - அவர் அழைக்கின்றவராக இருக்கின்றார். அப்போஸ்தலர் 13:2

3. **பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக நாம் செய்பவையும் அவருடைய நபத்துவத்தை வெளிப்படுத்தும்:**
   - அவருக்கெதிராகப் பொய் சொல்லுதல். அப்போஸ்தலர் 5:3
   - அவரைச் சோதித்தல். அப்போஸ்தலர் 5:9
   - துக்கப்படுத்தல். எபேசியர் 4: 30
   - அவித்துப்போடுதல் (பயனிழக்கச் செய்தல்) 1 தெச 5:19
   - எதிர்த்தல் அப்போஸ்தலர் 7:51
   - அவரை தூசித்தல் எபிரேயர் 10:29
   - அவருக்கு எதிராக தேவதூஷனம் சொல்லுதல் மத்தேயு 12:31-32, மாற்கு 3:28-29, லூக்கா 12:10

# விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்

எனது பெயர் ஸ்ரீதேவி. நான் எல்ல நிவ்பேர்க் தோட்டத்தைச் சார்ந்த ஒரு இந்து குடும்பத்தைச் சேர்ந்தவள். என் குடும்பத்தார் இந்து பக்தி நிறைந்தவர்களும் கோவில்களில் மிக ஆர்வத்துடனும் பொறுப்புடனும் தொண்டு செய்து வந்தனர். நானும் தவறாது தினமும் தெய்வங்களை வழிபட்டு வந்தேன்.

எனது சாதாரண தர படிப்பை முடித்த நான் அடுத்து என்ன செய்வது என யோசித்துக்கொண்டிருந்த வேளையில், எனக்கு அறிமுகமான ஒருவர் மூலமாக நான் கொழும்புக்கு வேலைக்கு வந்தேன். என்னை வேலைக்கு அனுப்பியவர் எனது பிரதேசத்தைச்சேர்ந்த ஊழியக்காரர். நான் வேலைக்கு சென்ற இடமும் ஒரு சபை மூப்பரின் வீடாகும். குடும்ப கஷ்டத்தினால் வேலைக்கு வந்தேன்.

பின்பு நான் வேலை செய்யும் குடும்பத்தார்கள் அழைத்ததன் காரணமாக, மறுப்பு தெரிவிக்க முடியாதவளாக அவர்களோடு சுமார் ஒரு வருட காலமாக சபைக்கு சென்று வந்தேன். சபையைப்பற்றியும் சபையில் நடக்கும் காரியங்களையும் அறியாமலும் புரியாமலும் இருந்தேன்.

என் தந்தை எனக்கு மூன்று வயதாயிருக்கும் போதே இறந்து விட்டார். என் தாய்தான் என்னையும் எனது மூன்று சகோதரிகளையும் வளர்த்து வந்தார். தந்தையை இழந்த என்னை நான் வேலை செய்த வீட்டார் தங்கள் வீட்டாரில் ஒருவரைப்போலவே நடத்தி வந்தனர். ஆண்டவரைப்பற்றியும் இரட்சிப்பின் வழியைப்பற்றியும் எனக்கு போதித்தார்கள். நான் ஒருநாள் ஆண்டவரை என் உள்ளத்தில் வாரும் என்று ஏற்றுக்கொண்டேன். அந்த நாளில் நான் இரட்சிப்படைந்தேன்.

எரேமியா 1:5ல் “நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்” எனும் வார்த்தையின் படி தேவன் என்னையும் தெரிந்து கொண்டார் என்பதை நான் புரிந்து கொண்டேன். தேவனுடைய திட்டங்கள் பெரியவை.

நான் கொழும்பு சபையிலேயே ஞானஸ்நானம் பெற்றேன். அதற்கு பிறகு எனக்கு ஆதரவாயிருந்த என் தாயும் இறந்து விட்டார்.



தனிமையில் தள்ளாடிய என்னை கர்த்தர் அற்புதமாய் வழிநடத்தினார். என் வீட்டார் மூலமும் உறவினர்கள் மூலமும் என் வாழ்வில் நிறைய சோதனைகள் வந்தன. கர்த்தர் ஆறுதலைத் தந்தார். நான் வேலை புரியும் வீட்டார் மூலமாய் கர்த்தர் எனக்கு நிறைய ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். அவர்கள் என்னைத் தங்கள் சொந்த மகளை ஆதரிப்பது போல ஆதரித்தார்கள்.

சுமார் பன்னிரண்டு வருடங்கள் அவர்கள் வீட்டில் இருந்தேன். பின் அவர்கள் எனக்கு திருமண ஏற்பாடு செய்தார்கள். நான் அவர்களிடம் சொல்லியிருந்தேன் யாராயிருந்தாலும்

பரவாயில்லை இரட்சிக்கப்பட்ட ஒருவரே எதிர்கால கணவனாக வர வேண்டும் என்று. அதன் பின் நான் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

ஞாயிறு தினத்தன்று என் வீட்டு எஜமான் சபை மூப்பர் என்ற படியால் சபை முடிந்து வீட்டுக்கு சென்ற பின் என்னைப்பார்த்து நாங்கள் நம் சபையில் ஒருவரை உனக்கு மணம்பிடிக்க எண்ணியுள்ளோம் என்றார். நான், யார்? என்று கேட்டேன். அவர் வேறு யாருமல்ல என் பிரதேசத்தில் என் அயல் வீட்டில் வசித்த என்னோடு ஒன்றாக ஒரே பாடசாலையில் கல்வி கற்ற சிறுவயது தொடங்கி எனக்கு நன்கு பழக்கமான குமார் என்பவர். அவர் சிறுவயதிலிருந்தே கடவுளை அறிந்து இரட்சிக்கப்பட்டவர். தற்போது கொழும்பில் வேலைக்காக வசிப்பவர் என்றார். 2014ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி எங்கள் திருமணம் கடவுளின் சித்தப்படி எங்கள் சபையிலேயே நடைபெற்றது.

இவ்விதமாக இந்நாள் வரை கர்த்தர் என்னை அற்புதமாக வழிநடத்துகிறார். அதே போன்று நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அற்புதங்களை செய்யவும் நம்மை இரட்சிக்கவும் கர்த்தர் வல்லவர்.



வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
*மத்தேயு 11:28*

## இயேசு கிறிஸ்து சிலுவையில் உரைத்த அந்த ஏழு வார்த்தைகள்

**"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"**
லூக்கா *23: 34*

**"இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்"**
லூக்கா *23: 43*

**"ஸ்திரீயே, அதோ, உன் மகன்." ...அதோ, உன் தாய்."**
யோவான் *19: 26 –27*

**"ஏலி! ஏலி! லாமா சபக்தானி"**
மத் *27: 46* / மாற்கு *15: 34*

**"தாகமாயிருக்கிறேன்"**
யோவான் *19: 28*

**"முடிந்தது"**
யோவான் *19: 30*

**"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்"**
லூக்கா *23: 46*



# அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் அநேகருக்கு காணப்பட்டார் என்பதை நாம் அறிந்துள்ளோம். அவ்வாறு அவர் தரிசனம் அருளிய சம்பவங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் எனும் நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் எழுதப்பட்டுள்ளன.

அவர் உயிர்ததெழுந்த பின் நாற்பது நாட்களில் பத்து முறை தரிசனம் அருளினார். அவற்றில் ஐந்து தரிசனங்கள் அவர் உயிர்த்தெழுந்த அன்றே நிகழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். அவர் அளித்த தரிசனங்களை அவை நடைபெற்ற ஒழுங்கில் உங்களுக்காக தொகுத்து கீழே வழங்கியுள்ளோம்.

| | | |
|---|---|---|
| 1. | யோவான் 20: 11 - 18 | - மகதலேனா மரியாளுக்கு |
| 2. | மத்தேயு 28: 8 - 10 | - யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமே, யோவன்னாள் மற்றும் இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுக்கும் |
| 3. | லூக்கா 24: 34<br>மாற்கு 16: 12 | - சீமோன் பேதுருவுக்கு |
| 4. | லூக்கா 24: 13 - 32<br>யோவான் 20: 19 - 25 | - எம்மாவுக்கு போன இருவருக்கு (ஒருவன் பெயர் கிலெயோப்பா) |
| 5. | லூக்கா 24: 36 - 43<br>யோவான் 20: 26 - 31 | - தோமா தவிர மற்ற சீஷர்களுக்கு |
| 6. | யோவான் 21 | - எட்டுநாளைக்குப்பின்பு தோமா உட்பட மற்ற சீஷர்களுக்கு |
| 7. | மத்தேயு 28: 16 - 20<br>1 கொரிந்தியர் 15: 6 | - திபேரியா கடலிலே மீன்பிடிக்கச்சென்ற சீடர்களுக்கு |
| 8. | 1 கொரிந்தியர் 15: 7 | - ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கு |
| 9. | அப்போஸ் 1: 3 - 12 | - யாக்கோபுக்கு |
| 10. | லூக்கா 24: 44 - 53 | - பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது |

# மெய்யான பக்திமான்

***உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. யாக்கோபு 1:26,27***

யாதொருவன் தேவனுடைய வசனத்தின் பிரகாரம் தான் பக்தியள்ளவன் என எண்ணும்போது அவன் அல்லது அவள்:

- தன் நாவை அடக்காது இருப்பாராகில்
- தன் ஊழியத்தைக் குறித்து மேன்மைபாராட்டுவாராகில்
- சகோதரர் மத்தியில் சமாதானமின்மையை உருவாக்குகிறவாராயின்
- மற்றோரைப்பற்றி துர்ச்செய்தியை பரப்புவாராயின்
- மூர்க்கமடைந்து அயோக்கியமான வார்த்தைகளை பிரயோகிப்பவராயின்
- அவமரியாதையான முறையில் பேசுபவராகில்
- எதிர்மறையான வார்த்தைகள் அல்லது விசுவாசமற்ற வார்த்தைகளை பேசுபவராகில்

அவர் மெய்யான பக்திமான் அல்ல.

இவ்விதமாக நடந்து கொள்ளும் ஒருவர் தேவனுடைய வார்த்தைக்கூடாக தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு ஜீவிக்கும் ஒருவராய் இருப்பார். எனவே, உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ளக் கூடியதான முக்கியமான கேள்வி ஒன்றை கேட்க நான் விரும்புகிறேன். அதென்னவெனில், நீங்கள் ஒரு பக்திமான் என நினைக்கின்றீர்களா?

ஞாயிறுதோறும் ஆலயத்திற்கு செல்வதாலும், வேதாகமப்படிப்பிற்கு செவிகொடுக்கும் கிறிஸ்தவன் என்ற ரீதியிலும், அநேக தருணங்களில் நீங்கள் பக்திமான் என ஒப்பிட்டுப்பார்த்து தகுதியுள்ளவன் என எண்ணுவதற்கு இடமுண்டு.

தேவனுடைய பிள்ளையே! நீ தேவ வசனத்தின்படி பக்திமானாய் வாழ விரும்புவாயெனில், உனது நாவை அடக்குவதற்கு உண்மையாகவே, அதற்கான ஜெபத்துடன் தேவனுடைய அநுக்கிரகத்தை தேடு. அப்போது பெற்றுக்கொள்வாய்.

**மெய்யான பக்திமானின் குணாதிசயங்கள் (அடையாளங்கள்) எவை?**

## கட்டுபடுத்தப்பட்ட நாவு

கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும், என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். சங்கீதம் 141: 3

தாவீது ராஜாவின் ஜெபமானது அவனது வாய்க்கு காவல் வைத்து அவனது நாவை தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் அடக்குவதேயாகும்.

நீங்கள் ஒரு போதகரானாலும், பிரசங்கியானாலும் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடுகிறவராயினும் உதடுகளினதும், நாவினதும் ஆளுகையை பரிசுத்தாவியானவருக்கு ஒப்புவித்து தேவனின் ஆளுகைக்குட்படுத்துவதே முக்கியமானதாகும். தேவன் பெலவீனங்களில் உங்களைப் பெலப்படுத்தி உங்களின் நாவை அடக்குவதற்கு தேவையான வழிநடத்துதலை பெற்றுத்தருவாராக.

தொடரும்

–சகோதரன் ரமேஷ்–

# தன்னிலை அறிதல்

*கடந்த இதழில் வெளிவந்த "இரட்சிக்கப்படாத பேதுரு" என்ற கட்டுரையின் தொடர்ச்சி*

சீமோன் என்ற இயற்பெயரைக் கொண்ட ஓர் மீனவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை தன் சகோதரன் அந்திரேயா மூலம் முதன் முதலாய் சந்திக்கின்றான். அப்பொழுது அவனது பெயர் "பேதுரு" என ஆண்டவர் இயேசுவால் மாற்றப்படுகிறது. பின்னர் தன் சொந்த ஊருக்கு வந்து தன்னை அழைத்த போது அவர் பின் செல்கின்றான். தன் மாமி ஆண்டவர் இயேசு மூலமாக அற்புதமாய் குணமாக்கப்படுவதைத் தன் கண்களால் கண்டு வியக்கின்றான். இன்னும் அவர் செய்த அநேக அற்புதங்களைக்கண்டும் அவரது இனிமையான பிரசங்கங்களைக் கேட்டும் வருகின்றான். எனினும் அவனுள் ஓர் வெற்றிடம் ஓர் தேடல் ஓர் அறியாமை.

நாட்கள் இவ்வாறு கடந்தோட அந்த நாள் வந்தது. ஆண்டவர் இயேசு கெனேசரேத்து என்னும் கடலருகே நின்றிருந்தார். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படகுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவற்றை விட்டு இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப்படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார். அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்கு சீமோன்: ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.

அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! அந்தப்படியே அவர்கள் செய்து, தன் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தான். அப்பொழுது மற்றப் படகிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகைகாட்ட அவர்கள் வந்து, இரண்டு படகுகளும் அமிழத்தக்கதாக மீன்களை நிரப்பினார்கள்.

சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போக வேண்டும் என்றான். திரளான மீன்களைப்பிடித்ததினிமித்தம், அவனுக்கு பிரமிப்பு உண்டானபடியினால் அப்படிச்சொன்னான். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.

இந்த உண்மைச் சம்பவத்தை வாசிக்கும் என் நேயர்களே, சீமோன் சிறுவயது முதலே மீனவன். மீன்பிடி துறையில் கைதேர்ந்தவன். அவனுக்கு தெரிந்தது அவன் அறிந்திருந்தது எல்லாம் மீன்பிடித்துறை மட்டுமே. அதுவரையிலான அவனது வாழ்நாள் யாவும் கடலிலும் கடல் சார்ந்த இடங்களிலுமே கழிந்திருந்தன. அவ்வாறான, மீன்பிடித்துறையிலே சிறப்புத்தேர்ச்சி பெற்றிருந்த சீமோன் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீன் கூட அகப்படாத நேரம் அவனை நாடி வந்த இரக்கமுள்ள ஆண்டவர் இயேசுவின் தெய்வீக வல்லமையால் இரண்டு படகுகளும் அமிழும் அளவு மீன்கள் பிடிக்கப்பட்ட போதே அவன் தன்னிலை அறிகின்றான்.

பலம் பலவீனமான போது, இயலுமை இயலாமையான போது இயேசு அவனை சந்திக்கிறார். அவன் தன் நிலையை அறிகிறான். ஆண்டவரே! நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப்போக வேண்டும் என்ற கதறல் அவனுக்குள் இருந்து வெளிவருகிறது.

இந்த உணர்வு அவனுக்குள் வருவதற்காகவே அவனது படகைத்-தேடி அவனை நாடி ஆண்டவர் இயேசு வந்தார். சீமோனைத் தேடி வந்த ஆண்டவர் இன்று உன்னையும் நாடி வருகிறார். உன்னையும் அவர் அறிந்-திருக்கிறார். "நீ அவருக்கு வேண்டும்" என்கிறது அவர் உள்ளம். இதை நீ உணர்கிறாயா? உன் நிலையை நீ அறிவாயா? இவ்வுலகில் நீ வேண்டும் என விரும்பும் யாவும் உன்னிடம் இருக்கலாம். இருந்தும் உனக்குள் ஓர் வெறுமையுண்டோ? உனக்குள் ஓர் தேடல் உண்டோ? ஆண்டவர் இயேசு உன்னைச்சந்திக்க காத்து நிற்கிறார்.

உன் வாழ்வில் நீ யாவையும் இழந்து நிற்கிறாயோ? உன்னால் எதுவும் முடியவில்லை என சோர்ந்து போனாயோ? எல்லாவற்றிலும் தோற்றுப்-போகிறேனே என ஏங்கி நிற்கிறாயோ? இரக்கமுள்ள ஆண்டவர் இயேசு உன்னை நாடி வருகிறார்.

சீமோன் தன்னிலை அறிந்தது போல உன் நிலையை நீ உணர்ந்-துகொள். அன்பின் ஆண்டவர் இயேசு உனக்காக தன் உயிர் நீத்தார். உன்னைக் காப்பாற்ற உன் பாவ தண்டனையைத் தன் மேல் ஏற்றார். உன்னைக்காக்க, உனக்கு உதவ இதோ! அவர் உயிர்த்தெழுந்து சதா-காலங்களிலும் உயிருள்ளவராய் உன்னைத் தேடி வந்து நீ அவரிடம் வரும்வரை ஆவலுடன் காத்து நிற்கிறார்.

"பரிசுத்தம் பெற, உம் அண்டை வந்து நிற்கும் ஓர் பாவி நான். என்னை ஆட்கொண்டு நித்தம் உம் அருள் தந்து கிருபையாய் வழி நடத்தும்" என உன் உள்ளத்தில் இருந்து ஆண்டவரை நோக்கிக் கதற உனக்கு எண்ணமில்லையோ?

"வா பாவி, மலைத்து நில்லாதே வா" என அழைக்கும் அந்த நேசர் இயேசுவிடம் வந்து உன் நிலையை அவரிடம் கூறு. அவர் உன்னை விடுவிப்-பார். உன்னை இரட்சிப்பார். அவர் உன்னை என்றென்றைக்கும் காப்பார்.

கப்பர்நகூம் என்ற ஊரில் சீமோனை அழைத்த போது "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப்-பிடிக்கிறவர்களாக்குவேன்" என சொன்னவர் இந்த சம்பவத்தின் பின், சீமோன் தன்னிலை அறிந்து நான் பாவியான மனுஷன் என கதறிய போது "இது முதல் நீ மனுஷரைப்-பிடிக்கிறவனாயிருப்பாய்" என்றதன் மூலம் அவனது ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்பம் இதுவே எனக்குறிப்பிடுகிறார். உன் வாழ்வையும் மாற்ற, புதிதாக்க வல்லவராகிய ஆண்டவர் இயேசுவிடம் வந்து உன்னிலை உணர்ந்து அவர் தரும் மீட்பைப் பெற்றுக்கொள். அவர் உன்னை நேசிக்கிறார்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3: 16

*ஆதாரம்:*

*லூக்கா 5: 1-11,*
*மத்தேயு 4: 13-20*
*மத்தேயு 8: 14-16*
*யோவான் 1: 41-42*
*லூக்கா 4: 38-41*

-S. வரபிரசாத்-

# அன்பிலும் அதிகமான அன்பு

*1987 பெப்ரவரி 13 வெளிவந்த மிசிலியர் எனும் அமெரிக்க விமானப்படையினரின் செய்தித்தாளில் கொலோனல் ஜோன் W. மன்சூர் என்பவர் எழுதிய உண்மைக்கதை:*

துப்பாக்கியேந்திய சிலர் வியட்நாம் நாட்டிலுள்ள ஓர் கிராமத்தில் ஊழியர் குழுவினரால் நடத்தப்பட்டு வந்த சிறுவர் விடுதி ஒன்றில் நுழைந்ததில் அங்கிருந்த ஊழியர்களும் சில சிறுவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். எட்டு வயதான ஒரு சிறுமி உட்பட பல சிறுவர்கள் படுகாயமுற்றனர்.

கிராம மக்கள் அயல் கிராமங்களிடம் உதவி கேட்டார்கள். அவர்கள் அமெரிக்க படையினருக்கு அறிவிக்க கடைசியில் அமெரிக்க வைத்தியரும் தாதி ஒருவரும் வந்தனர். அங்கிருந்தவர்களில் அச்சிறுமியே அதிகமாக காயப்பட்டிருப்பதையும் அச்சிறுமிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இரத்தம் அதிகமாய் வெளியேறி இருந்ததாலும் உடனடியாக வைத்தியம் செய்யாவிட்டால் அவள் இறக்க நேரிடும் எனவும் வைத்தியர் உறுதியாகச் சொன்னார்.

அச்சிறுமிக்கு இரத்தம் வழங்கப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. வைத்தியர், தாதி இருவரின் இரத்தமும் அச்சிறுமிக்கு பொருந்தவில்லை. காயமடையாது தப்பிய சிறுவர்களில் சிலருடைய இரத்தமோ அவளுக்கு பொருந்துகிறது என்றது நடத்தப்பட்ட பரிசோதனையின் முடிவுகள்.

சிறுமிக்கு உடனடியாக இரத்தம் கொடுக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் அச்சிறுமி இறந்து விடுவார் என வைத்தியர் அறைகுறை வியட்நாம் மொழியிலும் தாதி பிரெஞ்ச் மொழியிலும் சைகைகளாலும் பயந்திருந்த சிறுவர்களிடம் அச்சிறுமியின் நிலையை விவரித்தனர். பின், உங்களில் யாராவது இரத்தம் கொடுத்து உதவ விரும்புகிறீர்களா? என்றும் கேட்டனர். அமைதியே கிடைத்த பதிலாய் இருந்தது. நீண்ட நேரத்திற்கு பிறகு ஒரு சிறு கை மெதுவாகவும் நடுக்கத்துடனும் சற்று உயர்த்தப்பட்டு உடனே கீழே இறக்கப்பட்டு மீண்டும் மெதுவாக உயர்த்தப்பட்டது.

“மிக்க நன்றி” என்று பிரெஞ்ச் மொழியில் கூறிய தாதி “உன் பெயர் என்ன?” என்றார்.

மெல்லிய குரலில் “ஹங்” என்று பதில் வந்தது.

உடனேயே ஹங் படுக்கையில் கிடத்தப்பட்டான். அவன் கை மருந்தினால் துடைக்கப்பட்டது. ஊசி அவன் நரம்பில் செலுத்தப்பட்டது. வருத்தத்தோடே ஹங்

இருக்கமாகவும் அமைதியாகவும் படுத்திருந்தான். சற்று நேரத்துக்கு பின்னர், அவன் நடுங்க ஒரு துளி கண்ணீர் அவன் கண்ணிலிருந்து வெளிவந்தது. உடனே தன் மறுகையால் தன் முகத்தை மூடிக்கொண்டான்.

"வலிக்கிறதா ஹங்?" என்று கேட்டார் வைத்தியர். ஹங் தலை அசைத்தான். ஆனால் சிறிது நேரத்துக்கு பின்னர், இன்னொரு கண்ணீர் துளி விழுந்தது. மறுபடியும் தான் அழுவதை மறைக்க முயன்றான். "ஊசி வலிக்கிறதா?" என வைத்தியர் மீண்டும் கேட்க ஹங் மீண்டும் தலையசைத்தான்.

விட்டுவிட்டு வந்த கண்ணீர் இப்போது தொடரும் அமைதியான அழுகையாக மாறிற்று. அவன் கண்கள் இறுக மூடப்பட்டிருந்தன. அழுகையை அடக்க அவன் கை அவன் வாயை பொத்திக்கொண்டிருந்தது.

வைத்தியர் குழம்பிப்போனார். ஏனெனில் ஊசி அவனுக்கு வலியை ஏற்படுத்த வாய்ப்பில்லை. வேறு ஏதோ தவறு ஏற்பட்டிருக்க வேண்டும். அந்த தருணம் அங்கே வியட்நாம் தாதி ஒருவர் வந்து விட்டார். சிறுவன் வருந்துவதைக் கண்ட அவர் அச்சிறுவனுடன் கதைத்தார். அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். இனிமையான குரலில் அவனுக்கு பதில் கொடுத்தார்.

சிறிது நேரத்தில் சிறுவன் அழுவதை நிறுத்தி விட்டான். கண்களைத் திறந்து வியட்நாம் தாதியைக் கேள்விக்குறியோடு பார்த்தான். அவர் தலையசைத்த போது, ஓர் பெரிதான விடுதலை அவன் முகத்தில் பரவியது.

நிமிர்ந்து பார்த்த வியட்நாம் நாட்டை சேர்ந்த தாதி அமைதியாக அமெரிக்க வைத்தியரிடம்: "அவன் சாவதாக சிறுவன் நினைத்திருக்கிறான். நீங்கள் சொன்னதை அவன் தவறாக புரிந்து கொண்டுள்ளான். சிறுமி உயிர் பிழைத்து வாழ்வதற்காக அவனுடைய எல்லா இரத்தத்தையும் கொடுக்கும் படி நீங்கள் சொன்னதாக அவன் நினைத்திருக்கிறான்." என்றார்.

"அப்படியென்றால் ஏன் அவன் அதைச் செய்ய விரும்பினான்?" என்று பதில் கேட்டார் அமெரிக்க தாதி.

வியட்நாம் தாதியும் அந்தக்கேள்வியை சிறுவனிடம் கேட்க, சிறுவன் சொன்னான்: "அச்சிறுமி என்னுடைய நண்பி".

ஒருவன் தன் சிநேகிதருக்காகத்
தன் ஜீவனைக் கொடுக்கிற
அன்பிலும் அதிகமான அன்பு
ஒருவரிடத்திலுமில்லை.

# நரகம்

**நரகத்தின் தன்மை:**

1. லூக்கா 16: 23 - 27 - வேதனை நிறைந்த இடம்
2. வெளி 14: 11 - இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லாத இடம்
3. மத்தேயு 8: 12 - அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த இடம்
4. மாற்கு 9: 48 - அவர்கள் புழு (*ஆத்துமா*) சாவாமலும் அக்கினி அவியாமலும் (*அணையாமலும்*) இருக்கும்.
5. மத்தேயு 25: 46 - நித்திய கால தண்டனை பெறுகிற இடம்
6. லூக்கா 16: 27 - பிரிக்கப்பட்ட இடம் (கெஞ்சினாலும் பயனில்லை)
7. யூதா 1: 13 - நித்திய காரிருளான இடம் (என்றென்றும் காரிருள்)
8. ஏசாயா 33: 14 - நித்தியஜுவாலையுள்ள இடம் (பற்றியெறியும் அணையாத நெருப்புள்ள இடம்)
9. வெளி 20: 10 - அக்கினியும் கந்தகமும் கலந்த இடம்

**நரகத்தின் வடிவம்:**

1. வெளி 20: 15 - அக்கினிக்கடல்
2. மத்தேயு 13: 50 - அக்கினிச்சூளை
3. வெளி 20: 1, 2 - பாதாளம் (அடித்தளம் இல்லாத குழி)
4. சங்கீதம் 73: 28 - விளிம்புகளில்லாத (பற்றிக்கொள்ள முடியாத) சறுக்கலான அமைப்பு.

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..............................................................................................

**முகவரி:** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**ஒப்பம்:** ..............................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com